**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்குநேரி**
**முன்னிலை - திருமதி.ச.மஞ்சுளா.பி.ஏ.,எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நான்குநேரி.**
**2026ம் வருடம் ஜுலை திங்கள் 16 ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண்.37/2010**

ஜார்ஜ் ....வாதி

/எதிர்/

1. வெள்ளத்துரை(இறப்பு)
2. சண்முகசுந்தரம்
3. இசக்கிமுத்து (எ) இந்திரன்(இறப்பு)
4. கோபால் (இறப்பு)
5. சந்திரா
6. சொர்ணம் .... பிரதிவாதிகள்

(Amended as per order in IA.1/2019 dated.15.10.2020)

(Amended as per order in IA.7/2025 dated.26.09.2025)

இவ்வழக்கானது 06.07.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.R.அன்பரசு.எம்.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1, 3, 4ம் பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.மதிவதனபாண்டியன்.பி.காம்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 5, 6ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகர்.பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

# தீர்ப்புரை

**1)** தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்வதன் மூலம் வழக்குச் சொத்தில் வாதியின் தனித்த அனுபவத்திற்கு எதிர்வாதிகளோ/ முகவர்களோ/வகையறாக்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) வாதியின் வழக்குரையின் சுருக்கம் :

இதன் தபசில் கண்ட சொத்து வழக்கில் இல்லாத சுப்புலட்சுமி என்பவருக்கு அவரது தந்தை வழி பாத்தியப்பட்ட சொத்து என்றும், சுப்புலட்சுமி பெயரில் பட்டா தீர்வை எற்படுத்திக்கொண்டு பின்னாளில் வழக்கு வாதிக்கு 20.04.1999ல் கிரையம் கொடுத்தார் என்றும், அது முதல் வழக்கு சொத்து வாதியின் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், வழக்கு சொத்து வானம் பார்த்த பூமி என்பதால் சொத்தில் வளரும் உடை மரங்களை வெட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றும், வாதி அவரது கிரையத்திற்கு பிறகு வாதியின் பெயரில் பட்டா தீர்வை ஏற்படுத்தி கொண்டுள்ளார் என்றும், வழக்கு சொத்தில் எதிர்வாதிகளுக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் கிடையாது என்றும், வழக்கு சொத்தினை எதிர்வாதிகள் ஒருபோது அனுபவம் செய்திருப்பதும் இல்லை என்றும், மேற்படி பிரதிவாதிகள் தபசில் சொத்தில் உரிமை இருப்பது போல் பிரஸ்தாபம் செய்து வாதி அறியப்படாத நிலையில் பட்டா நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன் பேரில் மேற்படி பட்டா நடவடிக்கை தற்போது சீராய்வில் உள்ளது என்றும், வழக்கு எதிர்வாதிகள் தபசில் சொத்தில் வாதியின் அனுபவத்தினை இடைஞ்சல் செய்யும் முகமாக தபசில் சொத்தினில் அத்துமீறி நுழைய கடந்த 20.02.2010ல் எத்தனித்தனர் என்றும், இதனால் எதிர்வாதிகள் வழக்கு சொத்திற்கு வெகு தொலைவில் குடியிருப்பதனை ஆஸ்பதமாக வைத்து தபசில் சொத்தின் சுவாதீனத்தினை ஒரு மாத காத்தில் வலுக்கட்டாயமாக

எடுக்க உள்ளதாகவும், அதுபோல் வாதியின் உரிமை மூலத்தினை மறுத்து வருகின்றனர் என்றும், எனவே வீண் விவாதத்தினை தவிர்க்க விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மத்தியில் 2011ல் 1ம் பிரதிவாதி வழக்கில் கண்ட 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட உள்ள தரப்பையும் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டிய தரப்பை வாரிசுகளாக விட்டுவிட்டு காலம் சென்றுவிட்டார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>3) 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்வழக்குரையில் வியக்கத்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர பிராதில் கண்ட ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றும், வாதிகள் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தை பொறுத்து கூறப்படும் சுப்புலெட்சுமியினுடைய தந்தை உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவர் என்பவருடைய மகனான கோபால் என்பவருக்கு பிறந்த பேரன்கள் தான் இந்த 1, 2, 3 பிரதிவாதிகள் என்றும், மேற்படி சுப்புலெட்சுமி 1, 2, 3 பிரதிவாதிகளின் அத்தை என்றும், பிராது தபசில் சொத்தும் இதர சொத்துக்களும் ஆதியில் உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவருக்கும், வானமாமலை தேவருக்கும், முத்துராக்கு தேவருக்கும் 12.03.1962ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் என்றும், மேற்படி உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவருக்கு, வானமாமலை தேவருக்கு, முத்துராக்கு தேவருக்கு ஏற்பட்ட வாய்மொழி பாகபிரிவினையில் பிராது தபசில் சொத்து உடையார்தேவர் என்ற வெள்ளையா தேவருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி உடையார்தேவர் என்ற வெள்ளையா தேவர் என்பவருக்கு சுப்புலெட்சுமி, கோபால், லட்சுமி, சின்னத்தாய் என நான்கு பிள்ளைகள் இருந்தனர் என்றும், அவர்களில் மகள் சுப்புலெட்சுமிக்கும், பேத்தி ராணி என்ற செல்வராணிக்கும் மற்றம் இளைய மகள் சின்னத்தாய் என்பவருக்கும் போதுமான

நகைகள் சீர்சீராட்டுகள் மற்றும் ரொக்கம் கொடுத்து திருமணம் செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே அசையா சொத்துகளை மேற்படி நபர்களுக்கு கொடுக்க விருப்பம் இல்லை எனவும், தனக்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களை தம்முடைய பேரன்களான 1, 2, 3 பிரதிவாதிகளான கோபால் என்பவரது மக்களுக்கு கொடுக்க வேண்டுமென 12.08.1989ல் அன்று பதிவு செய்யப்பட்ட உயில் ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி உயிலை மேற்படி உடையார் தேவர் என்ற வெள்ளைய தேவருடைய பிற வாரிசுகள் ஒப்புக்கொண்டு விட்டபடியால் தான் அவர்கள் தபசில் சொத்தில் உரிமை கேட்கவில்லை என்றும், மேற்படி உயில் உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவர் 07.04.1990 அன்று இறந்த பிறகு ஊர்ஜிதத்திற்கு வந்து அதன் படி 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களுடைய தனித்த அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், 1, 2, 3 பிரதிவாதிகள் பெயரில் ஜமாபந்தி நபர்கள் சிட்டா, பட்டா வழங்கி அவர்களிடமிருந்து தீர்வையும் வசூலித்து வருகிறது என்றும், 2, 3 பிரதிவாதிகள் பிராது சொத்தை விற்கவும், இதர காரியத்திற்கும் 06.08.2009 அன்று 1ம் பிரதிவாதிக்கு ஒரு பொது அதிகார பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளனர் என்றும், 1ம் பிரதிவாதி பிராது தபசிலில் உள்ள நிலத்தில் ஏக்கர் 5, செண்ட் 32 உள்ள நிலத்தை 02.12.2009 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலமாக பாளையங்கோட்டை தாலுகா, திருத்தில் கதவு எண்.63ல் குடியிருக்கும் முத்தையா என்ற முருகன் குமாரரர் எம்.கருப்பசாமி அவர்களுக்கும், பாளையங்கோட்டை பெருமாள்புரம் செயின்ட் மேரிஸ் தெருவில் கதவு இலக்கம் 13 பி யில் குடியிருக்கும் ஜெயசிங் ராஜா அவர்கள் குமாரர் ஜெ.பொன்சிங் என்பவருக்கும் கிரையம் கொடுத்து அது அவர்களுடைய கூட்டு அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வருகிறது என்றும், மேற்படி கிரையத்திற்கு பிறகு 1, 2, 3 பிரதிவாதிகள் பெயர்களுடன் கருப்பசாமி மற்றும் பொன்சிங் ஆகியோர்களது பெயரும் சேர்க்கப்பட்டு கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பொன்சிங்கும் கருப்பசாமியும் தபசில் சொத்தில் ஏக்கர் 5, செண்ட் 32 நிலத்திற்கு தீர்வை முதலானவை செலுத்தி

அனுபவித்து வந்து மேற்படி நிலத்தை ஜெம் சிட்டி என்ற பெயரில் வீடு கட்டும் மனைகளாக பிரித்து பூலம் ஊராட்சியிலும், நகர் மற்றும் ஊரமைப்பு துரையிலும் உரிய அங்கீரம் பெற்று வீட்டு மனைகளை விற்பனை செய்துள்ளார்கள் என்றும், மேலும் மேற்படி ஜெம் சிட்டி மனைப்பிரிவில் உள்ள 69 எண் மனையில் கருப்பசாமி பூலம் ஊராட்சியில் உரிய கட்டிட அனுமதி பெற்று வீடு கட்டி வீட்டு வரி செலுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றும், மேலும் பிராது தபசில் சொத்தில் 5 ஏக்கர் 32 செண்ட் நிலத்தை பொன்சிங் மற்றும் கருப்பசாமி கிரையம் வாங்கியது தெரிந்தும் அவர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்றும், மேற்படி இருநபர்களும் அசல் வழக்கில் தீர்வு காண தேவையான கட்சிகள் என்றும், எனவே வாதியின் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>4) 5, 6ம் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> :**

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்வழக்குரையில் வியக்கத்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர பிராதில் கண்ட ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றும், வாதிகள் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தை பொறுத்து கூறப்படும் சுப்புலெட்சுமியினுடைய தந்தை உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவர் என்பவருடைய மகனான கோபால் என்பவருக்கு பிறந்த பேரன்கள் தான் இந்த 1, 2, 3 பிரதிவாதிகள் என்றும், மேற்படி சுப்புலெட்சுமி 1, 2, 3 பிரதிவாதிகளின் அத்தை என்றும், பிராது தபசில் சொத்தும் இதர சொத்துக்களும் ஆதியில் உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவருக்கும், வானமாமலை தேவருக்கும், முத்துராக்கு தேவருக்கும் 12.03.1962ம் தேதி கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவருக்கு, வானமாமலை தேவருக்கும், முத்துராக்கு தேவருக்கும் இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகபிரிவினையில் பிராது தபசில் சொத்து உடையார்தேவர் என்ற வெள்ளையா தேவருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையை மேற்படி

முத்துராக்கு தேவர் மற்றும் உடையார் தேவர் என்ற வெள்ளையா தவருடைய மகன் மற்றும் வானமாமலை தேவருடைய மகன் ஆகியோர்கள் உறுதி செய்து 16.07.2009 தேதியன்று ஒரு ஆவணமும் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், மேற்படி உடையார்தேவர் என்ற வெள்ளையா தேவர் என்பவருக்கு சுப்புலெட்சுமி, கோபால், லட்சுமி, சின்னத்தாய் என நான்கு பிள்ளைகள் இருந்தனர் என்றும், அவர்களில் மகள் சுப்புலெட்சுமிக்கும், பேத்தி ராணி என்ற செல்வராணிக்கும் மற்றம் இளைய மகள் சின்னத்தாய் என்பவருக்கும் போதுமான நகைகள் சீர்சீராட்டுகள் மற்றம் ரொக்கம் கொடுத்து திருமணம் செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே அசையா சொத்துகளை மேற்படி நபர்களுக்கு கொடுக்க விருப்பம் இல்லை என்றும், தனக்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துக்களை தம்முடைய பேரன்களான 1, 2, 3 பிரதிவாதிகளான கோபால் என்பவரது மக்களுக்கு கொடுக்க வேண்டுமென 12.08.1989ல் அன்று பதிவு செய்யப்பட்ட உயில் ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி உயிலை மேற்படி உடையார் தேவர் என்ற வெள்ளைய தேவருடைய பிற வாரிசுகள் ஒப்புக்கொண்டு விட்டபடியால் தான் அவர்கள் தபசில் சொத்தில் உரிமை கேட்கவில்லை என்றும், மேற்படி உயில் உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவர் 07.04.1990 அன்று இறந்த பிறகு ஊர்ஜிதத்திற்கு வந்து அதன் படி 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களுடைய தனித்த அனுபவத்தில் இருந்து வந்தது என்றும், 1, 2, 3 பிரதிவாதிகள் பெயரில் ஜமாபந்தி நபர்கள் சிட்டா, பட்டா வழங்கி அவர்களிடமிருந்து தீர்வையும் வசூலித்து வருகிறது என்றும், 2, 3 பிரதிவாதிகள் பிராது சொத்தை விற்கவும், இதர காரியத்திற்கும் 06.08.2009 அன்று 1ம் பிரதிவாதிக்கு ஒரு பொது அதிகார பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளனர் என்றும், 1ம் பிரதிவாதி பிராது தபசிலில் உள்ள நிலத்தில் ஏக்கர் 5, செண்ட் 32 உள்ள நிலத்தை 02.12.2009 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலமாக பாளையங்கோட்டை தாலுகா, திருத்து கிராமம் கதவு எண்.63ல் குடியிருக்கும் முத்தையா என்ற முருகன் குமாரர் எம். கருப்பசாமி அவர்களுக்கும், பாளையங்கோட்டை பெருமாள்புரம் செயின்ட் மேரிஸ் தெருவில் கதவு இலக்கம் 13 பி

யில் குடியிருக்கும் ஜெயசிங் ராஜா அவர்கள் குமாரர் ஜெ.பொன்சிங் என்பவருக்கும் கிரையம் கொடுத்து அது அவர்களுடைய கூட்டு அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வருகிறது என்றும், மீதமுள்ள 56 செண்டு நிலம் மட்டுமே பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டு அவர்களுடைய ஆளுகையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும், மேற்படி கிரையத்திற்கு பிறகு பிரதிவாதிகள் பெயர்களுடன் கருப்பசாமி மற்றும் பொன்சிங் ஆகியோர்களது பெயரும் சேர்க்கப்பட்டு கூட்டுப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பொன்சிங்கும் கருப்பசாமியும் தபசில் சொத்தில் நிலத்தை ஜெம் சிட்டி என்ற பெயரில் வீடு கட்டும் மனைகளாக பிரித்து பூலம் ஊராட்சியிலும், நகர் மற்றும் ஊரமைப்பு துரையிலும் உரிய அங்கீரம் பெற்று வீட்டு மனைகளை விற்பனை செய்துள்ளார்கள் என்றும், மேலும் மேற்படி ஜெம் சிட்டி என்னும் பெயரில் வீட்டுமனைகளாக பிரித்துள்ளதில் சாலைகள் மற்றும் பூங்காவிற்குரிய நிலங்களை திருநெல்வேலி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் மூலம் தமிழக அரசிற்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளதாகவும், மேம் ஜெம் சிட்டி மனைப்பிரிவில் உள்ள 69 எண் மனையில்க கருப்பசாமி பூலம் ஊராட்சியில் உரிய கட்டிட அனுமதி பெற்று வீடு கட்டி வீட்டு வரி செலுத்தி மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றும், மேலும் பிராது தபசில் சொத்தம் 5 ஏக்கர் 32 செண்ட் நிலத்தை பொன்சிங் மற்றும் கருப்பசாமி கிரையம் வாங்கியது தெரிந்தும் அவர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்றும், மேற்படி இருநபர்களும் சேர்ந்து உமா பொன்சிங் அவர்களுக்கு மனைகளை விற்பனை செய்தது தெரிந்தும் அவரையும் கட்சியாக சேர்க்கவில்லை என்றும், எனவே தேவையான நபர்களை கட்சியாக சேர்க்கப்படாத காரணத்தாலும் அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5)** வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.

**வழக்கெழு வினாக்கள்**

1) Whether the court fee has been correctly evaluated as per provision of TNCFA U/sec.25(b) for the suit immovable property market value?

2) Whether the plaintiff is entitled to the relief of declaration of title as prayed for?

3) Whether the plaintiff is entitled to the relief of consequential permanent injunction?

4) Whether the suit is bad for non-joinder of necessary parties?

5) Whether there has been any will dated.12.08.1989 is executed by Udaiyar thevar @ Vellaiyah thevar infavour of 1 to 3 defendants?

6) Whether the plaintiff is in lawful possession of the suit property?

6) வாதி தரப்பில், வாதி ஜார்ஜ் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதியின் கணவரான வெள்ளத்துரை என்பவர் பி.சா.1 ஆகவும், நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் நான்குநேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் முத்து சரவணன் என்பவர் பி.சா.2 ஆகவும், நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் நான்குநேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வரும் தஸ்லிமா ஆஷிபா என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு, பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.26 ஆவணங்களும், சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **இருபக்கவாதுரை**

**அ.வாதி பக்கம் வாதுரை**

வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாதுரையில், வழக்கு சொத்தானது வாதியால் 1999ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் சுப்புலட்சுமி என்பவரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை தந்தை உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவரை தொடர்ந்து சுப்புலட்சுமி அனுபவம் செய்து வந்து வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும் சுப்புலட்சுமியின் தந்தை 1 முதல் 3 பிரதிவாதிக்கு 1989 ம் ஆண்டு உயில் எழுதி வைத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்து பாத்தியப்பட்டதாகவும், பிரதிவாதிகள் கட்சி செய்து வருகின்றனர். வாதிகள் தரப்பில் 1 முதல் 7 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1 முதல் 3 பிரவாதிகள் பெயரில் இருப்பதாக சொல்லும் உயில் ஆவணத்தின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை, மேலும் சட்டம் கூறுவது போல் உயில் ஆவணம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 1 முதல் 26 ஆவணங்களில் பி.வாசா.ஆ 15 ஆன உயில் ஆவணத்தின் அடிப்படையிலேயே பிரதிவாதிகள் உரிமை கொண்டாடும் நிலையில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களை விசாரணை செய்யவில்லை, உயிலின் அசல் சமர்ப்பிக்காமல் சார்பதிவாளரை விசாரணை செய்வதன் மூலம் உயிலை நிருபணம் செய்ய இயலாது, மேற்படி உயிலில் பூலம் கிராமத்தில் அமைந்துள்ள வழக்குச் சொத்தை பொறுத்து எந்தக் குறிப்பும் இல்லை என்றும் உயில் ஆவணத்தில் மறுகால் குறிச்சி கிராம சொத்துக்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதம் முன்வைக்கப்பட்டது. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என வாதியால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் வாதியின் வழக்கிற்கு ஆதரவாக 2017(1) CTC 165 மற்றும் 2017(3) MWN258 வழக்குகளின் முன் தீர்ப்புகளை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று வாதம் முன்நிறுத்தப்பட்டுள்ளது.

**ஆ. 2, 5, 6ம் பிரதிவாதிகள் பக்கம் வாதுரை**

பிரதிவாதி தரப்பில் எழுத்து பூர்வ வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும்

AIR 1993 SC 957, AIR 2022 SC 4710, 2003) 2 MLJ 57SC, AIR 1948 PATNA 426, 2003 (3) MAD LJ 261, AIR 34) 1947 BOMBAY 122, 1974 (2) MLJ126 போன்ற வழக்குகளின் முன் தீர்ப்புகளை பிரதிவாதியின் வழக்கிற்கு ஆதரவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**8) தீர்வு**

எழுவினாக்கள் 1 முதல் 6 வரை ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக உள்ள நிலையில் அவை ஒரு சேர பரிசீலனைக்கு எடுக்கப்படுகிறது.

**9) எழுவினா 1 முதல் 6 க்கான பரிசீலனையும் அதன் முடிவும்:**

1. வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கை நீதிமன்ற முத்திரை கட்டண மற்றும் வழக்குகள் மதிப்பீடு சட்டம் 1955 பிரிவு 25 பி இன் கீழ் வழக்கு சொத்தை மதிப்பீடு செய்து ரூ.1000/- முத்திரை கட்டணம் செலுத்தியுள்ளார். மேலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலமான 2010 ல் சட்டப்பிரிவு 25 பி மற்றும் 7 ன் கீழ் சரியாக கணக்கீடு செய்து நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தப்பட்டதாக பிரதிவாதி தரப்பிலும் ஒப்புக்கொண்டு எழுத்துப்பூர்வவாதிரையிலும் தெரிவித்துள்ளதால் வாதி வழக்குப் பரிகாரத்தை நீதிமன்ற முத்திரை கட்டணம் மற்றும் வழக்குகள் மதிப்பீடு சட்டத்தின் கீழ் சரியாக மதிப்பீடு செய்து முறையான நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தி உள்ளதாக எழுவினா 1 க்கு வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

2. வழக்கு சொத்தை சுப்புலட்சுமி என்பவர் அவரது தந்தையை தொடர்ந்து அவரது பெயரில் வருவாய்த்துறை பட்டா மற்றும் தீர்வை ஏற்படுத்தி அனுபவம் செய்து வந்து மேற்படி சுப்புலட்சுமி பெயரில் உள்ள அடங்கல் வா.சா.ஆ.5 மற்றும் சர்வே எண் 648/1 ஏ 3 ஏ சுப்புலட்சுமி பெயரில் பட்டா ஏற்படுத்துதல் சம்பந்தமாக டி டி ஆர் 433/1997 ஆன நாங்குநேரி வட்டாட்சியர் செயல்முறை ஆணை 6/8/1997 ல் ஏற்படுத்தப்பட்ட உத்தரவு வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுப்புலட்சுமி என்பவரிடமிருந்து

வாதி வழக்கு சொத்தை 20.04.1999 தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழி கிரையம் பெற்று, அனுபவம் செய்து வந்த நிலையில் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததாக வாதியால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வாதியின் கிரைய ஆவணமான வா.சா.ஆ.1 ஐ கவனமாக பரிசீலிக்கையில், வாதியின் விற்பனையாளர் சுப்புலட்சுமி "எனக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டு என் பேரில் தனிப்பட்டாவாய் நான் அனுபவித்து என்னுடைய ஆளுகையில் இருந்து வருகிற இதன் தபசில் சொத்து" என குறிப்பிட்டு, பூலம் கிராமம் சர்வே எண் 648/1 ஏ 3 ஏ ஹெக்டேர் 2.38.0 நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி கிரயத்தை தொடர்ந்து வாசா. ஆ. 2, 3 ஆவணங்கள் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது. எனினும் சுப்புலட்சுமி என்பவருக்கு வழக்கு சொத்து எவ்வாறு உரிமை பெற்றது என்பதை நிரூபிக்கும் எந்த மூல ஆவணங்களும் வாதித்தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

4. வாதி வா சா. 1 ஆக தனது சாட்சியத்தில், “நான் சொத்து வாங்கும் போது அதற்குரிய வில்லங்கச் சான்றிதழ்களைப் பெற்று, விற்பனையாளருக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை அறிந்த பின்னரே வாங்குவேன். தாவா சொத்தை வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாங்கியுள்ளேன். அதில் இரண்டாம் பக்கத்தில், விற்பனையாளரான சுப்புலட்சுமிக்கு சொத்து சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுயார்ஜித சொத்து என்றால், அது விற்பனையாளருக்கு கிரய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகத்தான் இருக்க வேண்டும்” என்று சாட்சியம் அளித்துள்ளார். வாதி பிராதில் சுப்புலட்சுமி என்பவருக்கு அவரது தந்தையை தொடர்ந்து வழக்கு சொத்தை அனுபவம் செய்து வந்து வாதிக்கு கிரையம் கொடுத்ததாக தெரிவித்துள்ளார். மாறாக, வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சுப்புலட்சுமி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என கிரையம் கொடுத்துள்ளார்.

தந்தையிடமிருந்து பெற்ற சொத்தை சுயார்ஜித சொத்துக்கள் என குறிப்பிட்டு இருந்தாலும் மேற்படி சொத்து தந்தையால் நன்கொடையாக அளிக்கப்பட்டதா அல்லது தந்தையின் சொத்துக்கள் அவரது குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின்படி ஒதுக்கப்பட்டதா என எந்த விளக்கங்களும் வாதி தரப்பில் அளிக்கப்படவில்லை. எனவே, இரண்டும் ஒன்றுக்கொன்று மாறாக இருப்பது புலப்படுகிறது.

5. இதனை மேலும் உறுதி செய்யும் வகையில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.7 ஆவணமான 04.08.2011 தேதியிட்ட வருவாய் அலுவலரின் செயல் முறையில் வாதி சீராய்வு மனுதாரராக இருந்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவில் கீழ்க்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. “சீராய்வு மனுதாரருக்கு ஆவண எண் 526/ 1999 ன் படி திருமதி. சுப்புலட்சுமி என்பவர் தனக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது என குறிப்பிட்டு பூலம் கிராமப் புல எண் 648/1ஏ3ஏ ல் 2.38.0 ஹெக்டேர் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி சுப்புலட்சுமி என்பவருக்கு தாவா நிலம் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஆஜர் செய்யப்படவில்லை. இந்நிலையில் நாங்குநேரி வட்டாட்சியர் அவரது பெயரில் பட்டா மாறுதல் செய்து தனிப்பட்டா வழங்கியது தவறாகும் என்றும் அதனால் கோட்ட ஆட்சித் தலைவரின் ந.க.அ.1/7481/2009 தேதிய உத்தரவு உறுதி செய்யப்படுகிறது” என குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் வாதி மற்றும் வாதி கிரையம் பெற்ற சுப்புலட்சுமி என்பவரின் பெயரில் உள்ள வருவாய்த்துறை ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. அது குறித்து வாதியான வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், “ வா.சா.ஆ.2 பட்டா வழங்கியவுடன்

இவ்வழக்கின் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் மேற்படி பட்டாவை எதிர்த்து சேரன்மகாதேவி சார் ஆட்சியரிடம் மேற்படி பட்டாவை ரத்து செய்ய மேல்முறையீடு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சார் ஆட்சியர் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் சார்பாக உத்தரவு பிறப்பித்து உங்கள் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து விட்டார்கள் என்றால் எனக்கு எந்த தகவலும் இல்லாமல் பட்டா ரத்து செய்து விட்டார்கள். மேற்படி சார் ஆட்சியர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எதிர்த்து நான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு எண் 24/2010 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய உத்தரவு தான் வா.சா.ஆ.7 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.7 ல் பக்கம் 6 பத்தி 5 ல் எனக்கு விற்பனை செய்த சுப்புலட்சுமி என்பவருக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை எனவும், அதனால் வா.சா.ஆ.2 பட்டாவை ரத்து செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்." என்றும், "வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் ரத்தாகி விட்டதால் அதன் பின்னிட்டு வழங்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் செயலற்று போனது என்று சொன்னால் எனக்குத் தெரியாது" என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. மேற்கண்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் தற்போது வாதி மற்றும் வாதி கிரையம் பெற்ற சுப்புலட்சுமி என்பவரின் பெயரில் சட்டப்படியான வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்பது தெளிவாகிறது. இருப்பினும் வருவாய்த்துறை ஆவணங்கள் மட்டுமே சொத்துரிமையை மெய்ப்பிக்காது என்பதும் அவை அனுபவத்திற்கான சான்றாக மட்டுமே கருதப்படக் கூடியவை என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக் கொள்கையாகும். எனவே இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி வாதி தனது விற்பனையாளர் சுப்புலட்சுமி வழக்கு சொத்தின் மீது செல்லத்தக்க உரிமையைப் பெற்றாரா என்பதே ஆகும்.

8. பிரதிவாதிகள், சுப்புலட்சுமி என்பவர் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தையுடன் பிறந்த சகோதரி என்றும், வழக்குச் சொத்து உடையார் தேவர் என்ற வெள்ளையா தேவருக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதம் முன்வைத்துள்ளனர். மேற்படி உடையார் தேவர் தனது இறுதி விருப்பத்தின் அடிப்படையில் 12/8/1989 அன்று பி.வா.சா.ஆ. 15 உயில் ஆவணத்தில் தனது சொத்துக்களை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துள்ளதாகவும் அவரது மகளான சுப்புலட்சுமிக்கு எந்த சொத்தையும் கொடுக்க விருப்பமில்லை என தெரிவித்திருப்பதாகவும் கூறியுள்ளனர். அந்த உயிலின் அசல் ஆவணம் காணாமல் போனதால் அதனை நிரூபிப்பதற்காக காவல்துறையில் அளிக்கப்பட்ட புகார், புகார் ஏற்பு ரசீது, நாளிதழ் பிரசுரம் மற்றும் காவல்துறையினரின் கண்டுபிடிக்க இயலவில்லை என்ற சான்றிதழ் ஆகியவை பி.வா.சா.ஆ. 16 முதல் 19 வரை தாக்கல் செய்து செய்துள்ளனர். அசல் உயில் தொலைந்ததால் இரண்டாம் நிலைச் சான்றுகளாக காவல் நிலைய புகார் மற்றும் சாட்சியங்களின் நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும், முக்கியமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியது, பி.வா.சா.ஆ.15 உயில் ஆவணத்தில் வழக்குச் சொத்தான பூலம் கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண் 648/1 ஏ 3 ஏ குறித்த எவ்விதக் குறிப்பும் இடம்பெறவில்லை என்பதாகும். ஒரு உயில் ஆவணம் அதன் சொற்களின்படியே பொருள் கொள்ளப்பட வேண்டும் என்பதால், உயிலில் இல்லாத ஒரு சொத்தை நீதிமன்றம் தன்னிச்சையாகச் சேர்ந்து இருப்பதாக கருத இயலாது. எனவே, வழக்குச் சொத்துக்கும் இந்த உயிலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதால், பி.வா.சா.ஆ.15 உயில் பிரதிவாதிகளின் பெயர்களில் இருந்தாலும், இவ்வழக்குச் சொத்து மேற்படி உயிலில் குறிப்பிடாத நிலையில் இந்த வழக்கிற்கு உயில் ஆவணம் பொருந்தாது என இந்நீதிமன்றம் கருதி, எழுவினா 5க்கு விடை காணப்படுகிறது.

9. எனினும், விளம்புகை பரிகாரத்தை பெறுவதற்கு வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என நிரூபணம் செய்வது வாதியின் முதன்மை கடமை ஆகும். பிரதிவாதிகள் வழக்கில் உள்ள குறைபாடுகளை கொண்டு வாதியின் வழக்கு நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது என்பதால் வழக்கு சொத்தில் வாதியின் விற்பனையாளர் சுப்புலட்சுமி என்பவருக்கு உரிமை இருந்ததை நிரூபிக்காத நிலையில், சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 8 மற்றும் Nemo dat quod non habet என்ற சட்ட மொழியின் படியும் ஒருவரால் தனக்குள்ள உரிமையை மட்டுமே மாற்றம் செய்ய இயலும் என்பதன் அடிப்படையில் வாதி அவரது விற்பனையாளர் சுப்புலட்சுமிக்கு வழக்கு சொத்தில் சட்டப்படியான உரிமை இருந்தது என நிரூபணம் செய்யாததால், வாதிக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக் கூடியது அல்ல என நீதிமன்றம் கருதுகிறது. எனவே எழு வினா 2,3, மற்றும் 6 க்கு வாதிக்கு எதிராக விடை காணப்படுகிறது.

10. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில், 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 2.12.2009 தேதியிட்ட பி.வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின்படி, பொன்சிங் மற்றும் கருப்பசாமி என்பவர்களுக்கு கிரையம் கொடுத்து, மேற்படி நபர்கள் 19.2.2010 தேதியிட்ட பி.வா.சா.ஆ. 5 கிரைய ஆவணத்தின் படி உமா பொன்சிங் என்பவருக்கு கிரையம் கொடுத்தும் மேலும் பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்ததாக பி.வா.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழும் பி.வா.சா.ஆ. 12 கூட்டு பட்டாவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கிற்கு முன்பே பிரதிவாதிகள் வழக்கு சொத்தை விற்பனை செய்து வேறு நபர்கள் பெயரில் உரிமை ஏற்பட்டு அனுபவத்தில் உள்ளதாக வரி ரசீதுகள் மற்றும் கூட்டு பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளதிலிருந்து வாதியிடம் வழக்கு சொத்தில் அனுபவம் இல்லை என்பது தெளிவாக புலப்படுகிறது. எனவே வாதி கோரும் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்க கூடியது அல்ல என நீதிமன்றம் கருதுவதால்

எழு வினா 3 மற்றும் 6 க்கு வாதிக்கு எதிராக விடை காணப்படுகிறது.

11. அதேபோல், பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 2009 ல் பொன்சிங் மற்றும் கருப்பசாமி என்பவர்களுக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுத்துள்ள நிலையில் மேற்படி நபர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர் என எதிர்வழக்குரையில் தெரிவித்திருந்தும் வாதியால் மேற்படி நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படாமல் 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனு எண். 3 / 2021 அனுமதிக்கப்பட்டும் பின்பு சீராய்வில் மேற்படி மனு நீண்ட கால தாமதத்திற்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு சீராய்வு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற நபர்களை வழக்கில் கட்சி சேர்க்காமல் வழக்கு இருந்துள்ளது. வழக்கு சொத்தை வழக்கு தாக்கல் செய்த காலமான 2010 க்கு முன்பே மேற்படி நபர்கள் கிரையம் பெற்றுள்ள நிலையில் மேற்படி நபர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் இந்த வழக்கானது பாதிக்கப்பட்டுள்ளது என எழு வினா 4 க்கு வாதிக்கு எதிராக விடை காணப்படுகிறது.

12. மேற்கண்ட பரிசீலனைகளின் அடிப்படையில் வாதி தனது விற்பனையாளரான சுப்புலட்சுமிக்கு வழக்குச் சொத்து பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வந்து பின்னர் வாதியால் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்த நிலையில் பிரதிவாதிகள் மேற்படி அனுபவத்தை இடைஞ்சல் செய்தார்கள் என வாதியால் நிரூபணம் செய்ய தவறியுள்ளார். அதன் காரணமாக வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் வாதிக்கு சட்டப்படியான உரிமை ஏற்பட்டதாகவும் தெரிய வராததால், மேலும் அவசிய தரப்பினர்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளதால் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**20) அ) முடிவாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ) செலவுத்தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு. அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு. 2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 16 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2026.07.16 17:10:33 +0630

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**

**<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்:</u>**
**<u>வாதி தரப்பில்;</u>**
வா.சா.1 : ஜார்ஜ்

**<u>பிரதிவாதிகள் தரப்பில்</u>**:

பி.சா.1 : வெள்ளத்துரை

பி.சா.2 : முத்து சரவணன்

பி.சா.3 : தஸ்லிமா ஆஷிபா

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்</u>**

**<u>வாதி தரப்பில்</u>** :

| **Doc.No.** | **Date** | **Particulars of the documents** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.04.1999 | கிரைய ஆவணம் |
| வா.சா.ஆ.2 | - | வாதியின் பெயரில் உள்ள பட்டா எண்.649 கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | - | வட்டாட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்திய பட்டா எண்.649 |
| வா.சா.ஆ.4 | - | வாதியின் பெயரில் உள்ள தீர்வை ரசீது |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | – | சுப்புலெட்சுமி பெயரில் உள்ள 10(1) அடங்கல் |
| வா.சா.ஆ.6 | – | வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா நடவடிக்கை |
| வா.சா.ஆ.7 | 04.08.2011 | சீராய்வில் ஏற்பட்ட உத்தரவு |

**பிரதிவாதிகள் தரப்பில் :**

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | – | வெள்ளத்துரை என்பவரின் ஆதார் அட்டை நகல் |
| பி.சா.ஆ.2 | – | 6 ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் |
| பி.சா.ஆ.3 | 06.08.2009 | 1 ம் பிரதிவாதிக்கு 2, 3 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் (நீதிமன்ற சான்றிட்ட ஆவணம்) |
| பி.சா.ஆ.4 | 02.12.2009 | பொன்சிங் மற்றும் கருப்பசாமி ஆகியோர்களுக்கு 1 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் (சார்பதிவாளர் சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.5 | 19.02.2010 | உமா பொன்சிங் என்பவருக்கு பொன்சிங் மற்றும் கருப்பசாமி ஆகியோர்கள் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் |
| பி.சா.ஆ.6 | 08.09.2025 | வில்லங்க சான்றிதழ்(01.09.2009 மற்றும் 05.09.2025 வரை) |
| பி.சா.ஆ.7 | – | பிராது தபசில் சொத்திற்கு பூலம் ஊராட்சியால் வழங்கப்பட்ட மனை பிரிவு அங்கீகாரம் அசல் |
| பி.சா.ஆ.8 | – | பிராது தபசில் சொத்தில் அமைந்துள்ள பிளாட் 69 ல் வீடு கட்டுவதற்கான பூலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களரால் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி மற்றும் செல்வமுறை ஆவணம் அசல் |
| பி.சா.ஆ.9 | – | கருப்பசாமி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணம் 4) |
| பி.சா.ஆ.10 | – | கருப்பசாமி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள்(எண்ணம் 16) அசல் |
| பி.சா.ஆ.11 | – | பிராது தபசில் சொத்திற்கு பிரதிவாதிகள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | பொன்சிங் மற்றும் கருப்பசாமி ஆகியோர்கள் பெயரில் உள்ள கணினி பட்டா அசல் |
| பி.சா.ஆ.12 | – | பிராது தபசில் சொத்தில் வீட்டு மனைகள் கிரையம் பெற்ற நபர்கள் பெயரில் உள்ள பட்டா அசல் |
| பி.சா.ஆ.13 | – | பிராது தபசில் சொத்திற்கு பிரதிவாதிகள் பெயரிலும் அவர்களிடம் கிரையம் பெற்றவர்கள் பெயரிலும் செலுத்தப்பட்ட தீர்வை ரசீதுகள் (எண்ணம் 28) அசல் |
| பி.சா.ஆ.14 | 31.03.2021 | பொன்சிங் மற்றும் கருப்பசாமி ஆகியோர் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்காக நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்கள் மூலம் தமிழக அரசுக்கு எழுதிக்கொடுத்த தான ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.15 | 12.08.1989 | உயில் ஆவண எண்.9/1989(நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.16 | 10.05.2017 | 2ம் பிரதிவாதி 12.08.1989ம் தேதியிட்ட உயில் ஆவண எண்.9/1989 காணாமல் போனது சம்மந்தமாக பெருமாள்புரம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு (நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.17 | – | புகார் மனுவிற்கு பெருமாள்புரம் காவல்நிலையத்தால் வழங்கப்பட்ட புகார் ஏற்பளிப்பு சான்று வரிசை எண்.220/17(நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.18 | 12.08.1989 | உயில் ஆவண எண்.9/1989 காணாமல் போனது சம்மந்தமாக நாளிதழில் கொடுத்த அறிவிப்பு(நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.19 | 12.08.1989 | உயில் ஆவண எண்.9/1989 காணாமல் போனது சம்மந்தமாக பெருமாள்புரம் காவல் ஆய்வாளர் வழங்கிய சான்று (நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.20 | – | வெள்ளையா தேவர் அவர்களின் இறப்பு சான்றிதழ் (சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.21 | – | 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா எண்.895 (நீதிமன்ற சான்றிட்ட நகல்) |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.22 | – | 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள தீர்வை ரசீது (எண்ணம் 2) (நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.23 | – | 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பூலம் பகுதி - 2 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் கணக்கு (உண்மை நகல்) |
| பி.சா.ஆ.24 | 05.06.1985 | கொ.உடையார்தேவர் என்ற வெள்ளையாதேவர் அவர்கள் வெள்ளைத்தாய் என்ற செல்வராணி என்பவருக்கு எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணம் |
| பி.சா.ஆ.25 | | திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.IA.872/2014 in OS.215/2010 மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை (நீதிமன்ற சான்றிட்ட நகல்) |
| பி.சா.ஆ.26 | – | சுப்பையா என்பவரின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் |

**<u>சாட்சி தரப்பு சான்றாவணம்</u>:**

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | – | நான்குநேரி சார்பதிவாளர் அலவலர் சாட்சியம் அளிக்க அளித்த அனுமதி கடிதம் |
| சா.சா.ஆ.2 | – | சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கொண்டு வந்துள்ள ஆவணம் புத்தக 3ல் பதிவு செய்யப்பட்டுள்ள உயில் ஆவண எண்.9/1989 |
| சா.சா.ஆ.3 | – | உடையார்தேவர் என்ற வெள்ளையா தேவரின் கைரேகை 5வது கைரேகையின் சான்றிட்ட நகல் |

MANJULA C
Digitally signed by MANJULA C
Date: 2026.07.16 17:10:52 +0630

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**